# பதவி வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

### சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தேவையான தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

1. முகாமையாளர் - உற்பத்தி (MM 1-1 Grade II)
2. உதவிப் பொறியியலாளர் (JM 1-1 Grade II)
3. பிரத்தியேக செயலாளர் (JM 1-1 Grade II)
4. தரக் கட்டுப்பாட்டு அதிகாரி (JM 1-1 Grade II)
5. மருந்தாக்கல் தொழில்நுட்பவியலாளர் - உற்பத்தி (MA -2-1 Grade III)
6. பராமரிப்புப் பொறியியலாளர் (மின்சாரம்/இலத்திரனியல்/பொறிமுறை மற்றும் வளிச்சீராக்கம் (MA -2-1 Grade III)
7. திட்டமிடல் மற்றும் பெறுகை உதவியாளர் (MA -2-1 Grade III)
8. தரக் கட்டுப்பாட்டு தொழில்நுட்பவியலாளர் (MA -2-1 Grade III)
9. களஞ்சியக் காப்பாளர் (MA -2-1 Grade III)
10. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA -1-1 Grade III)
11. சாரதி (PL-3 Grade III)
12. மருந்தாக்க முழுமைப்படுத்தல் உதவியாளர் (PL-2 Grade III)
13. வேலை உதவியாாளர் (PL-1 Grade III)

**<u>விண்ணப்பிக்கும் நடைமுறை</u>**

- உத்தியோகபூர்வ இணையதளத்தில் (https://www.spmc.gov.lk) குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்குமான சான்றிதழ்களின் பிரதிகளை தனித்தனியாக சமர்ப்பிக்க வேண்டும். அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விண்ணப்பதாரர்கள், விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டால் நியமனம் பெற அவர்களை விடுவிக்க முடியுமா என்ற சான்றுடன் தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

இணையதள விளம்பரத்தில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணக்கமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர். ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவள தோட்டம்,**
**இரத்மலான.**
**2025-10-12.**